# செவ்வியல் இலக்கியங்களில் பொருள்சார் நிலைப்பாடு

## (பத்து நாள் பயிலரங்கக் கட்டுரைகள்)




**பதிப்பாசிரியர்கள்**


முனைவர் சு. நயினார்

முனைவர் பி.கே. புவனேஷ்வரி

முனைவர் க. சிவனேசன்

முனைவர் ந. அருள்மொழி

முனைவர் வ. பாண்டியராஜன்

முனைவர் முகிலை இராஜபாண்டியன்

முனைவர் து.வெள்ளைச்சாமி

முனைவர் சோ. முத்தமிழ்ச்செல்வன்



செம்மொழித்தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை &

அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி)

சிவகாசி. மார்ச்சு – 2017

# செவ்வியல் இலக்கியங்களில் பொருள்சார் நிலைப்பாடு


| | |
|---|---|
| முதன்மைப் பதிப்பாசிரியர் | : முனைவர் சு.நயினார்<br>அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி(தன்னாட்சி),<br>சிவகாசி – 626 124 |
| நூற்பொருள் | : பயிலரங்கப் பொழிவுக் கட்டுரைகள் |
| முதற்பதிப்பு | : மார்ச்சு, 2017 |
| வெளியீடு | : சென்னை, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் நிதிநல்கை |
| மொழி | : தமிழ் |
| அலைபேசி | : 9994374173 |
| மின்னஞ்சல் | : snainar1961@gmail.com |
| பக்கம் | : 152 பக்கங்கள் |
| ISBN | : 978 – 81 – 909440 – 6 – 9 |


## CEVVIYAL ILAKKIYANKALIL PORULCAR NILAIPPADU


| | |
|---|---|
| First Editor | : Dr.S.Nainar |
| First Edition | : March, 2017 |
| Published | : CICT, Chennai |
| Language | : Tamil |
| Pages | : 152 |
| Contact | : 9994374173 |
| E- mail | : snainar1961@gmail.com |
| ISBN | : 978 – 81 – 909440 – 6 – 9 |

# பொருளடக்கம்


| வ.எண். | கருத்துரைஞர் | தலைப்பு |
|---|---|---|
| 1. | முனைவர் இரா.இராமகுமார் | செவ்வியல் இலக்கியங்களில் செலவழுங்குவித்தல் |
| 2. | முனைவர் வீ.முத்துலட்சுமி | ஆற்றுப்படை நூல்களில் பெண்கலைஞர்கள் |
| 3. | முனைவர் சு.வினோத் | சங்ககால முல்லைத்திணை மக்களின் வாழ்வியல் |
| 4. | திரு ம.பிரசன்னா | அகநானூற்றில் உமணர் வாழ்வியல் |
| 5. | திரு. க.கந்தசாமிபாண்டியன் | சிலப்பதிகாரத்தில் பொருள்சார் பண்பாடு |
| 6. | முனைவர் வீ.ச.அசோக்குமார் | பதினெண்கீழ்கணக்கு அக, புற இலக்கியங்களில் பொருள்சார் நிலைப்பாடு |
| 7. | முனைவர் மா.பரமசிவன் | தினைப்புன வேளாண்மையும் ஆண் - பெண் இணைவுப் பொருளாதாரமும் |
| 8. | செல்வி சி.இராஜேஸ்வரி | சிலம்பும் பொருள்வணிகமும் |
| 9. | முனைவர் செ.கிளிராஜ் | முத்தொள்ளாயிரத்தில் பொருள்சார் வாழ்வியல் |
| 10. | முனைவர் மு.கற்பகம் | தொல்காப்பியப் புறத்திணைக் காட்டும் பொருள்சார் பண்பாடு |
| 11. | முனைவர் சு.வேலாயுதன் | சங்க இலக்கியத்தில் பண்டமாற்றுமுறை |
| 12. | முனைவர் ஒ.பாலகிருஷ்ணன் | புறநானூறு காட்டும் பொருள்சார் நிலைப்பாடு |
| 13. | முனைவர் ப.ஜெயகிருஷ்ணன் | சங்க இலக்கியத்தில் குறிஞ்சி – ஓர் அறிவியல் பார்வை |
| 14. | முனைவர் க.அழகர் | நற்றிணை காட்டும் பொருள்சார் பண்பாடு |
| 15. | முனைவர் பா.ஜெய்கணேஷ் | இறையனார் அகப்பொருளும் அதன் உரையும் |
| 16. | முனைவர் ந.சிதம்பரம் | இரட்டைக் காப்பியங்களில் பொருள்சார் வாழ்வியல் |
| 17. | திருமதி. சக்திவிஜயகுமார் | முல்லைநில மக்களின் தொழில்சார் வாழ்வியல் |
| 18. | முனைவர் சு.ஜெயக்குமாரி | நற்றிணையில் பொருளியல் சிந்தனைகள் |
| 19. | முனைவர் பே.பெருமாள் | தொகைப் பாடல்களை உளவியல் நோக்கில் கற்பிக்க, கற்க |
| 20. | முனைவர் சி.அருள்மைக்கேல்செல்வி | பட்டினப்பாலையில் பொருள்சார் வாழ்வியல் |
| 21. | திருமதி. நெ.சுதா | மதுரைக்காஞ்சியில் பொருள்சார் பண்பாடு |
| 22. | திரு. ச.செந்தில்நாதன் | மணிமேகலையில் உணவுப் பங்கீடு |
| 23. | முனைவர் கா.ஸ்ரீதர் | திருக்குறளில் பொருளறம் |
| 24. | முனைவர் இளங்குமார் | ஐங்குறுநூற்றில் பொருள்சார் பண்பாடு |
| 25. | முனைவர் இராஜ்மோகன் | முல்லைப்பாட்டில் பொருள்சார் பண்பாடு |

# 20. பட்டினப்பாலையில் பொருள்சார் வாழ்வியல்

முனைவர் சி. அருள்மைக்கேல்செல்வி
உதவிப்பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)
மதுரை – 625 018

மின்அஞ்சல்: adonispeo@gmail.com
அலைபேசி: 9751488492

**முன்னுரை**

புனல் சூழ்ந்து வடிந்துபோன நிலத்திலே
புதிய நாளை மனிதப் பைங்கூழ் முளைத்தே வகுத்தது
மனித வாழ்வை இனிய நற்றமிழே நீதான் எழுப்பினை

என்பதற்கு ஏற்பத் தொன்மைச் சிறப்பும் புதுமைப் பொலிவும் கொண்ட தமிழ்மொழி, இந்திய மொழிகளிலேயே செம்மொழி என்னும் தகுதியினைப்பெற்று வாழும் மொழியாக, வளர்ந்து கொண்டிருக்கும் மொழியாகத் திகழ்கின்றது. இனிமையும் நீர்மையும் கொண்ட தமிழ்மொழியில் தோன்றிய இலக்கியங்களில் பழந்தமிழரின் பண்பாட்டுச் சுரங்கமாக மானுட விழுமியங்களை அள்ளித்தரும் அமுதசுரபியாக, கலைகளின் இருப்பிடமாக வரலாற்றுப் பெட்டகமாகத் திகழ்பவை சங்க இலக்கியங்கள். இவற்றுள் சான்றோர் உரைத்த தண்டமிழ்த் தெரியல் ஒருபது பாட்டு ஆகும். இவ் ஒருபது பாட்டினுள் ஒன்பதாவதாக இடம்பெற்றுள்ளது பட்டினப்பாலை ஆகும்.

**பட்டினப்பாலை**

இப்பாட்டு 301 அடிகளை உடையது. காவிரிப்பூம்பட்டினத்தைச் சிறப்பித்துப்பாடிய பாலைத்திணைப் பாட்டு ஆதலால் பட்டினப்பாலை எனப்பட்டது. ஆசிரிய அடிகள் இடை இடையே விரவிவர பெரும்பாலும் வஞ்சி அடிகளால் ஆன வஞ்சி நெடும் பாட்டு ஆகும். இது செலவு அழுங்கல் என்னும் துறையில் அமைந்துள்ள அகப்பொருள் நூல். இதனைப் பாடியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் ஆவார். இப்பாடலுக்காக இவர் 16 நூறு ஆயிரம் பொன் பரிசாகப் பெற்றார். கலிங்கத்துப் பரணி, இரண்டாம் குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் முதலிய நூல்கள் இதனைப் பதிவு செய்துள்ளன. இதனைக் கலிங்கத்துப்பரணி,

**தழுவு செந்தமிழ்ப் பரிசில்வாணர் பொன்**
**பத்தொடு ஆறு நூறாயிரம் பெறப்**
**பண்டு பட்டினப்பாலை கொண்டதும்** (198)

என்கின்றது.

பரிசு கொடுத்தவன் திருமாவளவன் என்ற சோழ மன்னன். இவன் உருவப் பல்தேர் இளையோனின் மகன். இவனை, வெண்ணிக்குயத்தியார் (புறம் 66) கருங்குழல் ஆதனார் (புறம் 7) பரணர் (125, 246) நக்கீரர் (அகம் 141) ஆகியோர் பாடியுள்ளனர். சிலப்பதிகாரம், மூவருலா, கலிங்கத்துப்பரணி ஆகிய நூல்களும் வளவனின் வெற்றிச் சிறப்பைக் கூறுகின்றன. பொருநர் ஆற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் இவனே, இவன் 'கரிகாலன்' என்றும் அழைக்கப்படுகின்றான்.

**பொருள் சார் வாழ்வியல்**

301 அடிகளில் 296 அடிகள் புறப்பொருள் குறித்தே கூறுகின்றன. 5 அடிகள் மட்டுமே அகப்பொருள் கூறுவதாகப் பாடப்பட்டுள்ளன. புலவர் தாம் கூறவந்த அகப்பொருளைச் சிறப்பிக்கப் புறப்பொருளைப் பின்னணி ஆக்கியுள்ளார். மனிதன் வாழ்கின்ற வாழ்க்கையின் தன்மையைக் கூறும் இயல் வாழ்வியல் ஆகும். மனிதன் வாழப் பொருள் வேண்டுவது போலவே, அவன் வாழ்வதிலும் பொருள் வேண்டும். எனவேதான் பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்றார் திருவள்ளுவர். (குறள் 247) ஆனால் நற்றிணையோ நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும் செல்வம் அன்று அது தம் செய்வினைப் பயன் என்கிறது. (பாடல் 210) இன்னும் ஒரு படி மேலே போய், சென்றோர் முகப்பப் பொருளும் கிடவாது, ஒழிந்தோர் எல்லாரும் உண்ணாதும் செல்லார் என்று கூறித் தலைவனின் பொருள் செலவை விலக்குகிறது கலித்தொகை. (பாலைக்கலி, பாடல் 8) பட்டினப்பாலையும் பெறுதற்கரிய சிறப்பு வாய்ந்த திருமாவளவனின் காவிரிப்பூம்பட்டினத்தையே உரிமையாகப் பெறுவதாக இருந்தாலும், நீண்ட கரிய கூந்தலையும் விளங்குகின்ற பூணினையும் உடைய தலைவியைப் பிரிந்து உன்னோடு வரமாட்டேன் என்று தலைவன் தன் நெஞ்சுக்குக் கூறுவதாக அமைந்துள்ளது. அதற்கான காரணத்தைக் கூற வந்த புலவர்